**Tamil Heritage Foundation**

தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials

e-Book series

an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts

visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை

தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை

125

ஸ்ரீமதே சடகோப

எதிராஜ வரவர நிஜாநுபோக்யம

திருக்குருகூர் மஹாத்மியம்

# நம்மாழ்வார் சரித்திரம்.

முதற்பாகம்.



அகில பாகவதர்களுக்கு
சுலபமாய் விளங்கும்படி

பி. கோ. இராமாநுஜஸ்வாமியால்

எழுதப்பட்டு

எஸ். வி. ஸ்வாமி அண்டு ஸன்ஸ்
அவர்களால்,
டிக்ஸன் பிரெஸ்ஸிலும், பத்மா பிரெஸ்ஸிலும்,
பதிப்பிக்கப் பட்டது.
1925.


Registered Copy Right

விலை அணா 8.] [தபால்சார்ஜ் ப்ரத்யேகம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய

# புத்தக விளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| நாலாயிர திவ்யப்ரபந்தம் | 3 | 8 |
| முதலாயிரம் தனி அகராதியுடன் | 1 | 0 |
| பெரியதிருமொழி தனி டி | 1 | 0 |
| இயற்பா தனி டி | 1 | 0 |
| திருவாய்மொழி தனி டி | 1 | 0 |
| நித்யாநுஸந்தானம் மார்பில் பைண்டு | 0 | 10 |
| டி ப்ரதிபத தாத்பர்யம் | 1 | 8 |
| அஷ்டப்ரபந்தம் உரையுடன் காலிகோ பைண்டு | 3 | 8 |
| அஷ்டாதச ரஹஸ்யங்கள் டிப்பணியுடன் | 2 | 0 |
| விஷ்ணுஸ்தவமஞ்சரி | 0 | 12 |
| முமுக்ஷுப்படி வ்யாக்யானம் | 1 | 8 |
| ஸ்ரீவசனபூஷணம் வ்யாக்யானம், | 2 | 4 |
| குருபரம்பரை மூவாயிரப்படி | 0 | 12 |
| விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம் | 0 | 12 |
| திருவாராதனக்ரமம் | 0 | 6 |
| திருக்கோட்டியூர் நம்பி உடையவர்க்கு அருளிச் செய்த 18-ரஹஸ்யங்கள் | 0 | 4 |
| திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 0 | 12 |
| பெரிய திருமொழி வ்யாக்யானம் 1 முதல் 3 பத்துகள் | 2 | 12 |
| ,, 4 ,, 7 ,, | 3 | 0 |
| ,, 8 ,, 11 ,, | 2 | 14 |
| ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம் | 2 | 8 |
| பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம் | | |
| ,, 1 முதல் 2 பத்துகள் | 2 | 4 |
| ,, 3 4 5 ,, | 3 | 8 |
| உபதேச ரத்னமாலை வ்யாக்யானம் | 1 | 4 |
| திருச்சந்தவிருத்தம் ,, | 1 | 12 |



ஸ்ரீமதச்யுத சடகோப

யதிராஜ வரவர நிஜகுருப்யோநம:

## ஆழ்வார் திருநகரி யென்னும்

# திருக்குருகூர் மஹாத்மியம்.

சங்க தீர்த்த சமீபஸ்தா தாம்ரபர்ணி நதீதடே
ஸம்ஸ்த்திதம் புண்டரீகாக்ஷம் சங்க சக்ர தரம் ஹரிம்
வரதாபய ஹஸ்தஞ்ச ரமயா தரயா ஸஹ
நவநீத நிலாயம் பீதவாஸ ஸமச்யுதம்.

கெந்தமாதன 'பருவதத்திலே' ரிஷிகளில் சிரேஷ்டராய்த் திவ்விய தேசப் 'பிரபாவங்களைச்' சர்வகாலமுஞ் சிந்தித்துக்கொண்டு 'சந்துஷ்டராயிருக்கிற' ஸ்ரீபராசர குமாரரான 'ஸ்ரீ வேதவ்யாஸ பகவானை' அவருடைய குமாரரான ஸ்ரீ சுகப்பிரம்மரிஷியானவர் பிரதானர்களாயிருக்கிற முனிகளுடைய சபையிலே தெண்டஞ் சமர்பித்து ஒருவார்த்தை விண்ணப்பஞ் செய்கிறார். சகல 'வேதாந்த' அர்த்தங்களையும் நன்றாகவறிந்து வேதாந்த சூத்திரங்களைப் பண்ணரி 'விசிஷ்ட்டாத்வைத ஸ்தாபகராய்' பகவத் பக்திபூர்ணரான தேவரீர் 'ஸ்ரீமந்நாராயணனுடைய அவதாரமகிமையாலே' செல்

லாம் அறிவீர்கள், அடியேனுக்குப் பிராவாய்ச் சுவாமிய
யிருக்கிறீர். மஹாமேருவிலே, முனிகள் கூட்டத்திலே, ச
லார்தங்களையும், தேவரீர் அருளிச்செய்யும்போது கேட்டு
கொண்டிருந்தேன். அதினாலே அடியேனுடைய மனதில்
அஞ்ஞானங்களெல்லாம் போய்விட்டது: தேவரீருடைய
திருமுகமாகிற, காமகிரைப்பூனிலே நின்றும், பெருகி வருகி
பகவத் ப்ரபாவ கதையாகிற அமிர்தத்தைக் காதுகளாகி
தொன்னைகளால், பானம் பண்ணுகிறதினாலே திருப்தி
யில்லை. பூமியிலே யுண்டான திவ்விய தேசங்களின் மகா
மியங்களைத் தேவரீரருளிச்செய்ய வறிந்தேன். கேட்ட
உடனே சகலபாவங்களையும் போக்கக்கூடியதன்றோ. கேழ்
கிறபோது காதுகளுக்கு அமிர்தம்போலே இனிமையாயிரு
கிறது. இப்போது மகாமேருவினின்றும் கங்கை நதியிலே
ஸ்நானம் பண்ண வந்தேன். தேவரீரும் தேவரீருடைய
சிஷ்யர்களு மிங்கே யெழுந்தருளினது கேட்டு தேவரீ
டைய சந்நிதிக்கு வந்தேன். முன் புண்ணியகதைகளை
சொல்லுகிறபோது குருகாபுரி மஹாத்மியத்தைச் சொல்
லில்லையே. புண்ணிய நிஷ்டர்களுக்கு சொல்லுகிறதற்கு
கேட்கிறதற்கும் யோக்கியமாகையாலே அதை அடியே
னுக்கு அநுக்கிரகிக்கவேணும். தேவரீர் க்ருபாநிதியன்றோ
வென்று இப்படி சுகர் விண்ணப்பஞ் செய்ய ஸ்ரீவேதவியா
பகவான் தம்முடைய புத்திரரான ஸ்ரீசுகப்பிரம்ம ரிஷியை
கடாக்ஷித்து அவருடைய தாபங்களைப்போக்கி உத்தரமரு
ளிச்செய்கிறார்.

வரும் பிராமணோத்தமரே இந்தலோகத்திலே, வேறே கதைகளைக் கேட்கிறபேர்கள் அனேகம் பேர்களுண்டு. ஸ்ரீ வைஷ்ணவர்களாய்ச் சர்வேஸ்வரனுடைய திவ்விய தேசங்களின் பிரபாவங்களைக் கேட்கவேண்டுமென்கிற பேர்கள் கிடையாது, முன்னாலே உமக்குப் புண்ணியகதைகளைச் சொல்லுகிறபோது குருகாபுரி மகாத்மியஞ் சொல்லுகிறதற்கு மறந்துபோனோம். ஒரு நல்ல விஷயத்துக்கு விக்கினங்கள் வெகுவாயிருக்கும். அந்தக் குருகைஸ்தலமானது சகல சேதநாசேதனங்களுக்கும் அந்தரியாமியாய் நியந்தாவாய் திருச்சங்கணித்துறையை யுடைத்தான பொருநலாற்றின் தென்கரையிலே திவ்வியமங்கள விக்ரஹயுக்தனாய் சங்கசக்ர தாரனாய் புண்டரீகாக்ஷனாய் வரதாபயஹஸ்தனாய் ஸ்ரீ பூமிநீளா சகிதனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்கிற ஸ்வாமி ஆதிநாதனுக்கு மிகவும் உகப்பான திவ்வியதேசமன்றோ. மனுஷ்யர்களுக்கு மோக்ஷப்ரதமாயிருக்கும். நீர் பாக்கியவானாகையாலே இதைக் கேட்கப்பெற்றீர். நாமும் இந்த அமிர்த சமுத்திரத்தில் நீந்துகிறவனைப்போல் ஆனந்தத்தோடு சொல்லுகிறோம்:

சர்வேஸ்வரனுக்கு லீலார்த்தமாகவும் போகார்த்தமாகவும் விரஜைக்குக் கீழும் மேலும் இரண்டு விபூதியுண்டு. அவன் ஸ்வரூபம இவ்வளவென்று சொல்லவொண்ணாததாய்ச் சர்வவேதாந்தங்களுக்கும் லக்ஷணமாகப் ப்ரதிபாத்யமாய் அப்ராகிர்த திவ்யமங்கள விக்கிரஹவிசிஷ்டமாய்க் கொண்டு, சுத்தசத்துவமயமாய், ஞானானந்த ஜனகமாய்ப் பஞ்ச

சக்த்திமயமான பரமபதத்திலே ஸ்ரீ பூமி நீளாதிமஹிஷிகளோ டும், அனந்த கருட விஷ்வக்சேனாதி நித்யசூரிகளோடு முக்தர்களோடும், ஆனந்த நிர்ப்பாரராய்க்கொண்டு நித்தியசந் நித்தியஞ் செய்தருளுகிறான். இப்படியிருக்கிற சர்வே வரன் தானே லீலார்த்தமாக, சத்துவ, ரஜஸ், தமஸ்ஸுக்கள் கிற மூன்று குணத்தையுடைத்தான மூலப்பிரகிருதியையு அதிலே யூன்றிக்கிடக்கிற ஆத்துமாக்களையும் தனக்குச் ச ரமாக அதிஷ்டித்துக்கொண்டு, தேவ, மனுஷ்ய, திர்யக் ஸ்தாவரங்களென்கிற சதுர்வித சரீரங்களையும் சிருஷ்டித் ஆத்துமாக்களுடைய பூர்வகர்மாநு குணமாக தேவாதி சரீ களை கொடுத்து ஆத்மாக்களுக்கு அந்தரியாமியாய் நின் அந்தந்த ஆத்மாக்களின் அபேக்ஷித சம்விதானங்களை பண்ணி ரக்ஷித்து சங்கார காலத்திலே சங்கரித்து இப்ப லீலாரசத்தை அனுபவித்துக்கொண்டு நித்தியானந்தயுக் ஞன சர்வேஸ்வரன் பூர்வம் ஒருகாலத்திலே சகல பிர மாண்டங்களும் இடிந்துபோய் சகல சேதனாசேதனங்களு தன்னிடத்திலே லீனங்களாய் த்விபரார்த்தகாலாவதா பர்யந்தம் அத்விதியனாயிருக்கும்.

அனந்தரம் சிருஷ்டிகாலம் வந்தவுடனே சிருஷ்டிக் வேண்டுமென்று திருவுள்ள முண்டாய்த் தன்றிருமே யிலே யேகீபவித்துக்கிடக்கிற பிரகிருதி புருஷர்களை பிரித்து வெளியிலேவிட்டு எழாவரணத்தோடு கூடின அ டங்களை யுண்டாக்கி அநேகமாயிரங்கோடி அண்டங்களிலே பதினாலு லோகங்களையும் அதற்கதிபதியான பிரம்மாக்களை

யும் இவ்வளவுந் தானே அத்வாரகமாகச் சிருஷ்டித்துப் பிரம்
மாவுக்கு அந்தரியாமியாய் விசேஷாதிஷ்டானம் பண்ணி ருத்
திராதி சமஸ்த தேவாசுரர்களையும் மனுஷ்ய திரியக் ஸ்தாவரங்
களையும் உண்டாக்கி அவர்களுக்கு ஸ்தானங்களையும் அதிகா
ரங்களையுங் கொடுத்து ஆனந்தியாயிருக்கிற சர்வேஸ்வர
னாலே பிரம்ம சிருஷ்டியான அனந்தரம் அந்த பிரம்மாவான
வன் தன்னாலே சிருஷ்டமான ஜகத்ரக்ஷணார்த்தமாகப் பர்யா
குலனாய சர்வேஸ்வரனைத் தியானம் பண்ணி மனோ வாக்கு
காயகங்களினாலே தபசு பண்ணிக்கொண்டிருந்தான். இப்
படி ஆயிர வருஷம் பிரம்மா தபசுபண்ணும்போது சர்வேஸ்
வரன் பெரிய பிராட்டியாரோடு சங்க சக்ர கதாதரனாய்
முன்னேவந்து நின்றார். அவரை பிரம்மா சாஷ்டாங்கமாகத்
தெண்டஞ் சமர்ப்பித்து பிரதக்ஷணம் பண்ணி தேவரீருடைய
செந்தாமரை மலர்க்கமலத்தைப்போன்ற திருவடிகளைச் சரண
மாக வடைந்தேன். பிரிதிவ்யாதி சப்தாவரணங்களும்
பிரமாண்டங்களும், பதினாலு லோகங்களும், இதற்கு அதி
பதியான அடியேனும், அடியேனிடத்தில் ஜெனித்த ருத்தி
ரனும், திக்குபாலகர்களும், முப்பத்து முக்கோடி தேவர்
களும், திரியக்குகளும், ஸ்தாவரங்களும், சப்தசமுத்திரங்
களும், நதிகளும், பர்வதங்களும், சப்ததீவுகளும், இப்படி
சகல பதார்த்தங்களும், தேவரீராயிருக்கிறீர். இந்தத் திவ்
யமங்கள விக்கிரகமானது சர்வகாலத்திலும் என்னெஞ்சுக்
குள்ளே சாக்ஷாத்காரமான விஷயமாயிருக்கவேணும். அச்சு
தானந்த கோவிந்தனென்கிற திருநாமங்களாலே ப்ரசித்தரான

தேவரீர் திருவடிகளிலே சகலபாரத்தையும் வைத்தே
இப்போது ஜகத்ரக்ஷணார்த்தமாக முன்போலவே அவதார
ங்களை செய்தருளி ஆச்ரிதர்களை ஆனந்திப்பிக்கவேணு
அதற்கு விரோதிகளான அசுர ராக்ஷசர்களை நிரசித்தரு
வேணும். இந்த லோகங்களிலேயும் அங்கங்கேயுள்ள ப
வதர்களுக்குச் சேர்வை சாதித்தருளுகைக்கு அர்சாவதார
செய்தருளி நித்யஸாந்நித்தியஞ் செய்தருளவேண்டுமென்
இப்படி பிரம்மா ஸ்தோத்திரம்பண்ணி பிரார்த்திக்க ஸர்வே
ஸ்வரன் திருச்செவி சாத்தியருளி ஒருவார்த்தை யருளி
செய்தார்.

வாரும் பிரம்மாவே உம்முடைய ஸ்தோத்திரத்தாலு
தபசினாலும் சந்தோஷமானோம். நீர் சொன்னபடி யெ
லாஞ் செய்கிறோம். நமக்கு மிகவும் ப்ரீதிவிஷயனாகையாலே
உனக்கு ஒரு ரகசியஞ் சொல்லுகிறோம், சாவதானமாய்
கேள். அண்டசிருஷ்டியனந்தரம் உன்னை சிருஷ்டிக்கி
தற்கு முன்னே பூமண்டலமெல்லாம் பார்த்தோம். அதிலே
மலயமென்கிற மலையபருவதத்தினுடைய பெண்ணாகிய தாம
பிரபர்ணியானது நதிகளுக்கெல்லாம் சிரேஷ்டமாய் மஹ
மான தீர்த்தப் பிரபாவத்தை யுடைத்தாய் முத்துக்களுக்கு
தாயாய் ஒரு மகாநதி யிருக்கிறது. அதின் தென்கரையிலே
சமுத்திரத்திற்கு ஒருயோஜனை தூரத்திற்கு மேற்கே
நமக்கு மனோரம்யமாய் ஒருப்ரதேசங் கண்டோம்
அங்கே நித்ய சாநித்திய சாந்நித்யம் பண்ணுகிறோம்
ஆதிகாலத்திலே அவ்விடத்தை நாம் அபிமானித்தபடிய

ஞலே 'ஆதிக்ஷேத்திர' மென்னும் பெயரிட்டோம். அங்கே வந்து நித்தியம் நம்மை யாராதனம்பண்ணு, உன் னபீஷ்டமெல்லாம் செய்கிறோம். அங்கேயிரு, ஜகத்ரக்ஷணமும் அவதாரங்களும் பண்ணுகிறோம். இதிலே சந்தேகந் தேவை இல்லையென்று இப்படி சர்வேஸ்வரனருளிச் செய்த வார்த்தையைக் கேட்டுப் பிரம்மா ஒரு வார்த்தை விண்ணப்பஞ் செய்கிறான். மதுகந்தாவான ஸ்வாமியே தேவரீ ரனுக்கிரகத்துக்கு விஷயமானேன். தேவரீருடைய கிருபாஸமுத்திரத்தை யாராலே கரைகாணப்போகும். அடியேனுக்கு ஹிதோபதேசங்களைப் பண்ணுகிறபோது 'குருகாத்திரமு, தெரிசனமென்று அருளிச்செய்கையாலே 'குருகை' யென்று பெயராகக்கடவதென்று பிரம்மா சொல்லக்கேட்டருளி உத்தர மருச்செய்கிறார்.

அப்படித்தானே பிரசித்தி உண்டாகக்கடவது, அந்த குருகாக்ஷேத்திரமானது நாலுதிக்கிலும் ஒருயோசனை தூரந்துக்கு பாவனமாயிருக்கும் சர்வபாவங்களைப் போக்கும். சர்வதீர்த்தங்களிலும் உத்தமமான தீர்த்தத்தை யுடைத்தாயிருக்கும். நம்முடைய அநுக்கிரக விசேஷத்தினாலே போக மோக்ஷங்களைக் கொடுக்கும். அங்கே பூதப்பிரேத பிசாசுக்களொன்றும் அணுகமாட்டாது. ஆகையினாலே நீ அங்கே வந்து அடிக்கடி நம்மை அர்ச்சிக்கக்கடவாய் உன்னபீஷ்டங்களெல்லாம் சித்திக்கும். இதிலே சந்தேகமில்லை. ஒரு காலவிசேஷத்திலே ஒரு பக்தனையிட்டு சர்வருக்குங் கண்ணாலே கண்டு சேவிக்கலாம்படியான 'அர்ச்

சாவதாரரூபியாய் அதிசுந்தர விக்ரெகத்தோடே சாந்நித்
யம் பண்ணுகிறேம். உன்னுடைய பகல் முடிவிலே ராத்தி
ரியாகத்தின பிரளயத்திலே நம்முடைய சத்தியநிசயத்தாலே
அந்தக் 'குருகை' ஸ்தலத்துக்குப் பிரளயம் வாராது. இ
படிப் பகல் வந்து மூன்று லோகத்தையும் நீ சிருஷ்டிக்கி
போது இந்த ஸ்தலம் எப்போதும்போலே யிருக்கும்
இப்படி பிரதம பரார்த்தம் போய்த்து த்விதியபரார்த்த
திலே பிரதமதிவசத்திலே ஏழாம் மநுவந்திரத்திலெ இரு
பத்தி எட்டாவது சதுர்யுகத்திலே கலியுகம் பிறந்த நா
பத்தி மூன்றும் நாள் "சடகோபமுனிம் வந்தே சடாரா
புத்திதூஷகம், அஜ்ஞாநாம் ஜ்ஞாநஜனகம் திந்திரிணி மூல
ம்ஸ்ரயம்" என்றும் சொல்லுகிறபடியே வெகுதாந்யவருஷ
திலே வசந்தருதுவில் வைகாசி மீ. சுக்கிலபக்ஷம் பவுர்ணை
கூடிய 'திருவைசாக' நக்ஷத்திரத்தில் சுக்கிரவாரம் கர்கட
லக்னத்திலே திவ்யயோக திவ்யகரணங்களிலே ஆதித்யரா
திவாகராச்யுத பானுக்க ளுதயத்திலே நீங்காத உள்ளிருள்
நீங்கி சோஷியாத பிறவிக்கடல் சோஷித்து விகஸியாதபே
திற் கமலமலரும்படி வகுளபூஷண பாஸ்கரோதயமுடைய
ராய் ஜென்மந்துடங்கி யோகாரூடராய், ஸ்ரீசடகோபனென்
னும் பிரசித்தராய் நம்மிடத்திலே பக்தியையுடைய மகாபாக
வதராய், நாமே அவதரிக்கப்போகிறேம். நாலுவேதங்களையும்
திராவிடப்பிரபந்தங்களாலே, சர்வாதிகாரமாகப் பண்ணி,
சகல அர்த்தங்களையும், வெளியிடுகிறேம், இப்படி அங்கே
அவதரித்த, ஸ்ரீசடகோபயோகியினுடைய, அபிமானத்தி

றலே அவர் திருவடிகளில், சம்பந்தமுடையவர் களெல்லோரும், கலிதோஷம்தட்டாமே ஜ்ஞான பக்தி வைராக்கிய நிஷ்டர்களாய், மோக்ஷத்தை அடைவார்களென்று இப்படி ஸர்வேஸ்வரன் பிரம்மாவுக் கருளிச்செய்து அந்தர்த்தியானமாக வெழுந்தருளினார். அனந்தரம் பிரம்மாவும் பிரீதிமனத்தை யுடையராய் ஆதிக்ஷேத்திரத்திலேவந்து அங்கே உண்டான ஆச்சரியங்களைக்கண்டு ஸர்வேஸ்வரன் உகந்தருளின ஸ்தலமென்று தானும் பிரீதிபண்ணி வேதியை கற்பித்து ஆதிநாதனை யாராதித்து சத்தியலோகத்துக்குப் போனான். இந்த கதைகளை யெல்லாம் ஸ்ரீவசிஷ்டபகவானுக்குப் பிரம்மா சொன்னார். அனந்தரம் ஸ்ரீவசிஷ்டபகவான் ஸ்ரீபராசரபகவானுக்குச் சொன்னார். அனந்தரம் ஸ்ரீபராசரபகவான் நமக்குச் சொன்னார். என்று ஸ்ரீவேதவியாஸபகவான் ஸ்ரீசுகருக்கும் நைமிசாரண்ணியவாசிகளான ரிஷிகளுக்கும் சொன்னார் இப்படிப்பட்ட அந்த குருகாமான்மியத்தினுடைய கதையை யாவனொருவன் கேட்கிறான் யாவனொருவன் படிக்கிறான் யாவனொருவ னிதைக் கேட்கவேண்டுமென்று பிரசினம் பண்ணுகிறான், யாவனொருவ னிதை எழுதுகிறான் அவர்களெல்லோரும் இங்கே அபீஷ்டபோகங்களை யடைந்து அந்தியத்திலே மோக்ஷத்தை யடைவார்கள்.

திருக்குருகூர் மஹாத்மியம் ஸம்பூர்ணம்;

—:o:—



நம்மாழ்வார்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ப்ரபன்னஜன கூடஸ்தரான

# நம்மாழ்வார் வைபவம்.

திருவழுதி நாடென்றுந் தென்குருகூரென்றும்
மருவினியவண் பொருநலென்றும் அருமறைகள்
அந்தாதி செய்தானடியிணையே யெப்பொழுதுஞ்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்பேணும்
இனத்தாரை யல்லாதிறைஞ்சேன், தனத்தாலும்
ஏதுங்குறையிலே னெந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

## ஆழ்வார் திருவவதாரஞ் செய்த வம்சத்தின் வைபவம்.

கங்கை யமுனை கோதாவரி ஸரஸ்வதி நர்மதை சிந்து காவேரி நதிகளுக்கெல்லாம் உத்க்ருஷ்டதமமாக சொல்லப்பட்ட திருத்தாம்ரபர்ணி யென்கிற பொருநல்லாற்றங் கரையிலே திருநகரியென்னும் ப்ரக்யாதமான நல்லாரு

நதியில் திருக்குருகூருக்கு நிர்வாஹகரான விச்வாம்ஸர்தாமே "எந்தை தந்தை தந்தை தந்தைதந்தைக்கு மூத்தை" என்கிறபடியேயும் "எழாட்காலம் பழிப்பிலோம்" என்கிற படியேயும், ஏழு தலைமுறையிலும் புறந்தொழாமையை யுடைத்தாய்க் "குடிகுடிவந்தாட் செய்யும்" தொண்டரான பூவைசியக் குலத்திலே பிறந்து பழிப்பிலராயிருப்பர். அங் கனே என்னில்; திருநகரியை திருவழுதி வளநாட னென் கிற ராஜா மகாதார்மீகனாய் நெறிமுறைதவறாது ராஜ்ய பரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்கையில், ஒருதினத்தில் அகஸ்தியர் ஆங்கிரசர் முதலான மஹாருஷிகள் அவரிடந் திரகுவா அவர் எதிர்கொண்டுபோய்த் தண்டன் ஸமர்பித்து அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி அர்க்யபாத்யாதிகளா லுபசரித்து சத்கரித்து, வந்தகாரியமேதென்றுவினவ; கும்ப ஸம்பவர் மஹாப்ரீதராய் அரசனே உமது முற்பாட்டனா குருகன் என்பவர் இராஜ்யாபிஷேகஞ் செய்துக் கொண்ட போது இந்த நகரியை ஜனஸ்தான மாக்கிக் கொண்டிருந்தார். ஆகையால், இதற்குக் குருகாபுரி யென்று பெயர் வந்திருக் கிறது; அவ்வரசனால் அசுரராக்ஷச பயமின்றிக்கே ப்ரஜை கள் சுகித்திருக்கக் கண்டிருக்கின்றோம்; அப்படியே நீரும் ஆண்டுக் கொண்டிருக்கிறபடியால், எங்களுக்கு நேர்ந்திருக் கிற கஷ்டத்தை தீர்த்துக் காப்பீரென்றெண்ணி இங்கு வந்தி ருக்கின்றோமென்ன; அந்த திருவழுதிவளநாடர் அடியேனுக் கதையுமின்றும் பணிகொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்க அப்போது கும்பஸம்பவர் கேளீர் இராஜாவே துந்துமாரனெ

ன்றுமொரு ராக்ஷஸன் ப்ரம்ஹாவினுடைய வரபலத்தினலே அதிக பலிஷ்டனும் மாயாரூபங்களை யெடுக்கவும் வல்லவனும் எங்க ளாஸ்ரமங்களையும் யாக த்ரவ்யபாத்ரங்களையும் வேத சாஸ்த்ர புராணங்களையும் நாசஞ்செய்ய யெத்தனித்து அதிக உபத்ரவம் செய்யாநிற்க நாங்கள் சஹிக்காமல் பிரம்ஹா பக்கல் போய் அவனுடைய துன்மார்க்கங்களை யெல்லாம் விண்ணப்பஞ் செய்து, அவனுக்கு எந்தகாலத்தி லெவரால் முடிவுகால நேருமென்று கேட்க; அதற்கு சதுர்முகனும்மெங்களை பார்த்து எவன் திருப்பாவையை க்ரமமாக ஸேவித்து நாராயணனை புத்ரனாகப் பெற்று அந்த புத்ரனாலே சுதர்சன சஹிதனாய் வந்தவிஷ்ணுவை குமாரனாக லபிக்கிறானே அந்த சக்ரபாணியால் மாத்திரம் தான் சம்ஹரிக்கப் படவேண்டுமென்றார், மற்றவர்களால் தனக்கு முடிவு நேரிடலாகாதென்றும் அவன் நம்மிடத்தில் வரம் பெற்றிருக்கின்றானாகையால் நீங்கள் ஸ்ரீய: பதியான விஷ்ணுவை ப்ரார்த்தித்து அவராலவனுக்கு முடிவு தேடக்கடவீர்க ளென்று ஞாபிக்க நாங்கள் க்ஷீராப்திக்குப் போய் எம்பெருமானை யடிபணிந்து இந்த விருத்தாந்தங்களை விண்ணப்பம் பண்ணிக்கொள்ள; எம்பெருமானும் நீங்கள் பயப்படவேண்டாம், முனிவர்களே பாண்டிய தேசத்தில் ஸ்ரீநகரிக்கதிபதியான திருவழுதிவள நாடனென்கிற அரசனுக்கு நாமே பௌத்ரனாகப் பிறந்து துர்க்குமாரனை சம்ஹரித்து உங்களுடைய குறையை தீர்த்துக் கொடுக்க விருக்கின்றோ மாகையால் நீங்கள் போய் அவ்வரசனுக்குத் திருப்பாவையை உபதேச

சித்து க்ரமமாக அநுஷ்டிக்கும்படிச் செய்யவேண்டு மெ
னுக்ஞாபிக்க; அவ்வாக்ஞையை சிரமேற் கொண்டு இ
போது உம்மிடத்தில் வந்திருக்கிறோம் காணீர்; இ
ரங்கள் மநோரதத்தை வ்ருத்தி செய்தற் பொருட்
பஞ்சஸம்ஸ்கார பூர்வமாக அந்த திருப்பாவையைக் கே
டுணர்ந்து அநுஷ்டான நிஷ்டருக்க வேண்டியதென்றுதா
உம்மாலெங்களுக்காகத்தக்க உபகாரமென்று சொன்னார்கள்.
அதன்பின்பு அரசன் அகஸ்தியரை நோக்கிச் சுவாமீ பூர்
காலத்திலெவராகிலும் இந்தத் திருப்பாவையை இவ்விதமா
வநுசந்தித்துச் சந்தானவிருத்தி முதலானது பெற்
திருந்ததுண்டாகில் அடியேனுக் குணர்த்தவேண்டுமென்
ப்ரார்த்திக்க கும்பமுனிவர், கேளீர் வழுதிவள நாடா
பூர்வத்தில் மஹீஸார க்ஷேத்ரத்தில் ஸம்ஹநனமென்கிற ந
ருக் கதிபதியான க்ஷேத்ரவிதனுக்கு மதியும், குரோதனும்,
சித்தன் என்கிற மந்திரிகளும் சங்கல்ப னென்கிற ஆசாரியர்
களும் உண்டு. அவர்களைக்கொண்டு ராஜ்யம் பண்ணுகிறகாலத்
தில், ஒருநாள் மதியில்லாத சமயத்தில் சங்கல்பன் ஸ்வாமீ!
அடியேன் அநேக விருக்ஷங்களும் நதிகளும் ஸரோவரங்
களும் சஹிதமாயிருக்கிற மஹாரண்யத்தில் பிரம்ஹ ருத்தி
ராதிகளை கிரசிக்கத்தக்க சக்தியையுடைத்தான காமபீம,
இப்தக, குச்சித, அகம்பன, கண்டக, அபிதாகத்தையு
டைய ஆறுபேர் மத்தியில், ருசி என்கிற திவ்ய ஸ்த்ரீயை
உனக்குப் பத்னியாக அவர் அநுமதியை கொண்டு
வந்தேன் வாருமென்ன; இராஜனும், க்ரோதன், சித்தன்,

முன்னுக்குப்போய், ருசியைவரித்து தன் ராஜ்யத்தையும் மந்திரிகளையும் மறந்து ருசியோடேகூட மதன விலாஸசேஷ்டைத் தொடேயிருந்து, ஒருநாள் உத்தியானவன விஹாரமாய்ப் போய் மார்க்கப்பிரமணத்தாலே, துர்கமாரண்யத்தில் புகுந்து, ஸிம்ஹ, சரப சார்தூல ம்ருகங்களைக்கண்டு பயந்து, விஷம கண்டகமான மார்க்கத்திலேபோக, தத்ப்ரதேசத்தில், பீகர ஸ்வரூபத்தையுடைய திருடர்கள் ருசியைவிட்டுவிடுமென்று பின் தொடர்ந்து அடிக்க, ம்ருகாதிகள் சுற்றி ஹிம்ஸிக்கவர, அந்த சமயத்தில், ருசியும் ராஜாவின் கண்டத்தை பிடித்துக் கொண்டு என்னை விடாதிரேன்று நிர்பந்திக்கப், பயந்து ஓடி யோடி அப்பள்ளத்தில் விழுந்து அந்த மத்தியிலொரு கொடியை பிடித்து கீழ்தலையாயிருக்க, ருசி தலையை பிடித்துக் கிழுக்கிழுக்க, ஒரு மஹாசர்ப்பமானது கடிக்கப்புக, பன்னிரெண்டு பாதங்களும் ஆறுமுகங்களும் உடையதொரு யானைகாத்தாலே கூபஸமீபத்திலுள்ள விருக்ஷத்தைபேதிக்க ஸ்வேத க்ருஷ்ண வர்ணங்களையுடைய இரெண்டு எலிகள் விருக்ஷ மூலத்தைச் சேதிக்க, இவ்விதமான மஹாபத்திரயத்திலும், சேதநாவிதன், அந்த ருசியை விடாமல் பரிதபிக்கப் போராநின்றுக்கு, பின்பு தனது பூர்வஜ்ஞானத்தை யறிந்து, ருசிமோஹத்தை விட்டு, ஐயோ, ஸ்ரீய:பதிக்கு சேஷமாயிருக்கிற யெனக்கிந்த துஷ்ட சாங்கர்யத்தாலல்லவோ மஹோபத்திரவங்கள் நேரிட்டது, யென் மந்திரியான மதி யெங்கேயோவென்று துக்கிக்கிற சமயத்தில், அங்கே மதியும் அரசனைத் தேடித் தேடி வந்துபார்த்து அவனுமேல நடந்த

வ்ருத்தாந்தங்களை கேட்டு இராஜனை பயப்படவேண்டாம் திருமலையில் திருவேங்கட முடையானையே தஞ்சமென்று பற்றியிருக்கும் ஒரு த்விஜகுல ஸ்ரேஷ்டரான ஸ்ரீவைஷ்ணவராலே திருப்பாவை லபித்திருக்கிறேன், அத்தை கேளுமென்று சொல்ல, இராஜாவும் அத்தை கேட்டவுடனே ருசி கூபத்தில் விழுந்ததும் மஹோபத்ரவங்களும் மாயமாய் போய்விட்டது, சேஷத்ரவிதனும் மதியோடே கூடபோய் இராஜ்யத்திலிருந்து ஸ்ரீவைஷ்ணவ சஹவாசத்தை பேணிப் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாக இந்த திருப்பாவை லபித்து நித்தியமாய் பக்தி புரஸ்ஸரமாக அநுசந்தித்துக்கொண்டு திருவேங்கட முடையானையே தஞ்சமென்றடைந்து சத்கதிக்காளாகிறான். அன்றியும் வடதிசையில் சங்கராம நகரத்துக்கதிபதியா யிருந்த சைவசமயியான உக்ரஸ்ய னென்பவன் தனது மந்த்ரியாகிய புண்டரீக ரென்கிற ஸ்ரீவைஷ்ணவருடைய புருஷகாரத்தால் திருவரங்கப் பெரிய கோயிலுக்குப் போய் நம்பெருமானை சேவித்து, அங்கே விப்ரநாராயண ரென்று மொருபாகவதோத்தமரை ஸந்தானார்த்தியாய் ஆஸ்ரயித்துக் கொண்டிருக்க; ஒருநாளில் அந்த பாகவதர் அவன் முகத்தை பார்த்து, உம்முடைய மனதில் ஏதோ குறை யிருப்பதாகத் தோன்றுகிறதுகாணென்ன ; அவன் ஸ்வாமீ! தேவரீருடைய க்ருபையால் அடியேனுக்கு ஐசுவர்யம் தொடக்கமான எதினுங்குறைவில்லையாயினும் சந்தானமில்லாத குறையொன்றே, எவ்வகைப்பட்ட சஜ்ஜனர்கள் சாங்கத்தி லிருக்கினும் அடியேனை வாட்டிவருந்தச்

செய்கின்றதென்ன; அந்த பாகவதர் அவனுக்கிரங்கி, பஞ்ச ஸம்ஸ்காரஞ்செய்து திருப்பாவையை யுபதேசித்து, இதை நீர் ஒரு வருஷகாலம் வரை அநுஸந்தித்துப் போருவீராகில் உமக்குச் சுபுத்ரனுண்டாவா னென்றருளிச் செய்ய; அவனும் மஹாபாக்யமென்று சொல்லி விடைபெற்றுத் தன்னுடைய நகரத்திற்குப்போய், சில நாளைக்குப்பின், சைவ சாங்க்யத்தால் மதிமயக்குண்டு அநுசந்தானத்தை மறந்து பழய நடையைப்பற்றி; சில வருஷங்கள் கழிந்தும் அவனுக்கு சந்தானமுண்டாகாமலே யிருந்தது; அதன்மே லவன் மிகவும் புத்ராபேக்ஷையால் வருந்திப் பித்தேறி, ஒரு நாளில் பசுபதி கோயிலுக்குப்போய், தன்னுடைய உடைவாளை யுருவிக்கொண்டு, ஓ சந்த்ரசேகரனே! சந்தான ஹீனனான எனக்கு ராஜ்யமிருந்து எதுக்காம்? ப்ராணனிருந்தேதுக்காம்? இதோ உன்னடி நிலையில் என்னுயிரை விடுகிறேன் கொள்ளுமென்று சிரஸைச் சேதித்துக் கொள்ள யத்னிக்கையில், பசுபதி பார்த்து நில்லுங்காண்! ஒரு காலத்தில் உபய விபூதி நாயகனான நம்பெருமான் சன்னிதிக்குப்போய் பரமபாகவதரான விப்ரநாராயணராலே திருப்பாவையை லபித்துக்கொண்டு வந்த நீர், அவருடைய ஆக்ஞைப்படியே அதை அநுசந்திக் வேண்டியதாயிருக்க, அயோக்யரைப் பேணி அதை அநுதாரணம்பண்ணி அபசாரப் பட்டிருக்கிறீராகையால், உமக்கிப்படி நேரிட்டது; ஆகையா லிப்போதாவது அந்த திருப்பாவையைக்ரமப்படிக்கு அநுசந்தானம் பண்ணிப்போருவீராகில் சில நாளைக்குள் ஒரு புத்திரனுண்டாகி முதலில்

வைஷ்ணவ த்வேஷியாயிருந்து பின்பு ஸ்ரீ வைஷ்ணவனாகி,
உமக்குச் சத்கதியையுந் தரவல்லவரோவா னென்ன, உக்ராஸ்
யன், உடைவாளை யுறையிலிட்டுக்கொண்டு ஆஸ்தான
மடைந்து, க்ரமப்படிக்குத் திருப்பாவையை யநுசந்தித்துக்
கொண்டிருக்க, அவன் பத்னி கர்ப்பவதியாய்ச் சங்கராந்த
னென்னும் ஓர் குமாரனைப் பெற்றாள். அந்த புத்ரன் ப்ராப்த
யௌவனனுமாய் வ்யவகாரதசையை யடைந்தவாறே,
வைஷ்ணவர்களை த்வேஷித்து, கேவலவீரசைவனாய் சது
ரங்க பலத்துடன் நாடு நகரமும் சைவ மதத்தை பரவச்
செய்துக்கொண்டு கடைசியில் பதரி காச்ரமத்திற் கடுத்த
ஸ்ரீ வைகுண்டபுரம் என்கிற நகரத்துக்குப்போக, அங்கி
ருந்த இடையருக் கதிபதியான கோபால குலதிலகரான
கோவிந்ததாஸ ரென்று மொரு பாகவதர் தன்னுடைய சைந்
யங்களைக் கூட்டிக்கொண்டு எதிர்த்து, அவனைப் பராஜி
தனாக்கி அவனுடைய ராஜ்யத்தையும் ஆக்ரமித்துப் பரிபா
லனம் பண்ணிக்கொண் டிருக்கச்செய்தே, சங்கராந்தனும
தேஜஸை இழந்து தனிப்பட்டுக் காடுறைய, அவ்வளவிலே
திருவேங்கடந் தெந்தை அவன் விஷயத்தில் க்ருபையுடை
யவராக, அவன் தன்னுடைய துன்மார்க்கச் செய்கைகளைத்
தன்னுள் தானே யோசித்து மனம் நொந்து, ஸ்ரீநிவாசனை ப்ர
த்யக்ஷ தெய்வமென்று தன்னுடைய பூர்வதசையில் கேட்
டிருந்ததையும் நினைத்துத், திருமலைக்குப்போய்த் திருவேங்
கடமுடையானைச் சேவித்து பாண்டவதீர்த்தக்கரையிலிருந்த
ஓர் ஸ்ரீவைஷ்ணவரையாச்ரயித்து பஞ்சஸம்ஸ்காரஸம்பன்ன

னாய்த் திருவேங்கட தாசனென்று தாஸ்ய நாமமும் பெற்று திருப்பாவையை வஸித்து க்ரமமாக ஒரு வருஷகாலம் அநுசந்தித்துக் கொண்டிருக்க திருவேங்கடத்தப்பன், மிகவும் ப்ரீதனாகிக் கோவிந்த தாஸருடைய ஸ்வப்நத்திற் போய்க் கோவிந்த தாஸரே பூர்வம் சங்காதந்தனென்னும் பெயரை உடையவனாய் உம்மிடம் வசித்திருந்துப் பராஜிதனாய்ப் போன வைஷ்ணவத் வேஷி இப்போது நம்முடைய திருமலையை அடைந்து ஸ்ரீவைஷ்ணவனாய்த் திருவேங்கட தாஸனென்றுந் திருநாமத்தைப் பெற்று, நம்முடைய சன்னிதியில் திருப்பாவையை அநுசந்தித்துக்கொண்டு க்ருதார்த்தனாய்ப் போருகிறான். ஆகையால் நீர் அவனுடைய ராஜ்யத்தை அவனுக்கே சமர்ப்பித்துவிட்டு ஸ்வஸ்தானத்திற்குப் போமென்று ஆக்ஞாபிக்கக் கோவிந்ததாஸரும், பரிவாரத்துடனே திருமலைக் கெழுந்தருளித் திருவேங்கடதாஸரைக் கண்டு சேவித்துப் பஹுமர்யாதைகளுடனே அழைத்துக் கொண்டுபோய் இராஜ்யாபிஷேகஞ் செய்துவைத்துத் தன்னுடைய நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தார் திருவேங்கடதாஸரும் பரம பாகவதோத்தமனாய் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கூட்டிச் சுகமேயிருந்தாரென்று அகஸ்த்ய முனிவர் அருளிச் செய்தார்.

அப்போது திருவழுதி வளநாடர் கும்ப முனிவரை அடிபணிந்து அடியேனை க்ருதார்த்தனாக்கி யருளவேண்டுமென்றுப் பிரார்த்திக்க அவர் பஞ்சஸம்ஸ்கார பூர்வமாகத் திருப்பாவையை உபதேசித்து அநுசந்தானக்ரமத்தையும்

அருளிச் செய்து, ஆங்கிரசாதி ரிஷிகளுடனே தம்முடைய
ஆசிரமத்தை அடைந்தவராயினார். அனந்தரம் திருவழுதி
வளநாடர் திருப்பாவையை ஸ்வரூபாநுரூபமாக ஒருவருஷ
காலம் அனுஷ்டித்து ஸ்ரீமந்நாராயணனையே புத்திரனாகப்
பெற்று அவருக்கு தர்மதரரென்கிற திருநாமத்தைச் சாத்தி
ப்ராப்த யௌவனனானவாறே, இராஜ்யாபிஷேகஞ் செய்து
வைத்து பத்னி ஸஹிதராய்த் திருமலைக் கெழுந்தருளினார்.
பின்பு தர்மதரர் ப்ரஜா பரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்
கையில், ஒரு நாளில் ஸ்ரீ நாரதர் அங்கெழுந்தருளி அவரு
க்கு மந்த்ரரத்னத்தை யுபதேசம் செய்துப்போக, அவரதை
சாங்கமாக ஜபித்துக் கொண்டு வருகிற காலத்தில், ஸ்ரீய:
பதி ஸ்ரீசுதர்சன ஸஹிதராய் அவருக்கு புத்திரராகவந்தவத
ரிக்க அவருக்கு சக்ரபாணியென்னும் திருநாமம் சாத்தி,
ப்ராப்த யௌவனனான சில நாளைக்கு பின் ஸேநாஸமேதராய்
துர்க்குமாரனென்னும் ராட்சனிருக்குமிடந் தேடிப்போய்
ஸம்ஹாரஞ் செய்து லோகத்தை வாழ்வித்தருளி க்ருத
யுகம்போலே சகல சுரமுனிகண ஸேவிதராய் தத் தர்மமார்க்
கத்தில் ராஜ்யபாரஞ் செய்துக் கொண்டிருந்தார். இவ்வித
மாய் திருவழுதி வளநாடர் குமாரர் தர்மதரர், அவர் குமாரர்
சக்ரபாணி, அவர்குமாரர் அச்யுதர், அவர்குமாரர் செந்
தாமரைக் கண்ணர், அவர் குமாரர் செங்கண்ணர், அவர்
குமாரர் பொற்காரியார், அவர் குமாரர் காரியார், அவர் குமா
ரர் மாறனென்கிற "நம்மாழ்வாரு" மென்று இவர்கள் வம்ச
பரம்பரை இப்படி பரம்பரையாக தொண்டு பூண்ட இத்

திருவம்சத்திலே பொற்காரியாரென்கிறவர், தம்முடைய புத்திரன் காரியாருக்கு விவாஹம் செய்விக்க திருவுள்ளங் கொண்டு திருவண்பரிசாரத்தில் தமக்கு சமான சம்பந்த யோக்யராய் வைஷ்ணவ சந்தானிகரா யிருந்த திருவாழ் மார்பர் திருமாளிகையிலே எழுந்தருளி அவரைக் குறித்து உம்முடைய புத்திரி உடைய நங்கையாரை நம்முடைய புத்திரன் காரியாருக்கு விவாஹம் பண்ணித் தரவேணுமென்று கேழ்க்க திருவாழ்மார்பரும் மிகவும் சந்துஷ்டராய்க்கொண்டு சம்மதித்து பெருத்த கண்ணாளங்கள் செய்து உதக பூர்வகமாக உடைய நங்கையாரை காரியாருக்கு சமர்ப்பிக்க, காரியாரும் பாணிக்ரஹணம் பண்ணி திருமணம் புணர்ந்து வண்பரிசாரத் திருவாழிமார்பனை எம்பெருமானையும் திருவடித் தொழுது மீளவும் பெரியவன் குருகூரிலே எழுந்தருளினர். காரியார் சில நாளைக்குப் பின் உடைய நங்கையாரை திருக்குருகூரில் நின்றும் பிறந்த இடமான திருவண்பரிசாரத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் மீண்டெழுந்தருளுவிக்கச் செய்தே "தேன் கொள் சோலை திருக்குறுங்குடியிலே" ஒரு சூத்திரன் விசேஷ தனிகனாய் மதித்து, அந்த தனத்தை பஹுமுகமாக வ்யயம் பண்ணி துஷ்ட விப்ரர்களாலே வேத சாஸ்திர புராணங்களை கற்று, அவை எல்லாம் பொய் என்று நிஷேதித்து, இனி இந்த ருஷிகளாலே கல்பிதமான வேத சாஸ்திர புராணங்களை த்வம்சம் செய்து யேகமதமாம்படி செய்யத்தக்க, ஜனனமரணமற்ற குமாரனை தவத்தாலே லபிக்கக் கடவேனென்று திருக்குறுங்குடி

நம்பி திருவடிகளை தனது ஹ்ருதய கமலத்தில் இருத்திக் கொண்டு கோரதபம் செய்யா நிர்கச் செய்தே மஹரிஷிகளெல்லாரும் கூடி காரியார் சந்நிதிக்குவந்து, காரியாராலே விசேஷ ஸத்க்ருதராய், அவரைக் கண்டு காரியரே இந்த குருக் குடியிலொரு சூத்திரன் வேத சாஸ்திர புராணங்கள் கல்பித மென்று, அத்தை த்வம்சம் செய்வதாக ஒரு புத்திரனைக் கோறி தவத்திலிருக்கிறான், நீரும் அங்கே வைஷ்ணவம் என்கிற யாகத்தாலே நம்பியைப்ரஸன்னனாக்கி நந்தகத்தைப் பெற்று, அவனை சம்ஹாரம் செய்யாவிடில் ஜகத்துக்கு மஹோபத்ரவங்கள் உண்டாகு மென்ன காரியாரும் சுபஸ்ய சீக்கிரம் என்று மஹரிஷிகளோடே திருக்குருக்குடியில் ஸ்வபத்னியான உடைய நங்கையாருக்கு அந்த விருத்தாந்தத்தை அறிவித்து மஹரிஷிகள் சன்னதியில் வைஷ்ணவ யாகம் ஸ்வபத்தியோடே தீக்ஷிதராய் இருந்து செய்து சம்பூர்ணமாக முடிந்தவாறே திருக்குருக்குடி நம்பி ப்ரஸன்னராய் நந்தகத்தைக் கொடுத்து இன்னமும் உமக்குள்ள அபீஷ்டங்களேனீரென்ன, எனக்கொரு சந்தானம் கிருபை செய்யவேணுமென்ன நம்பியும் நாமேவந்தவதரிக்கிறோம் நீர் துஷ்ட நிக்ரஹம் பண்ணுமென்ன, காரியரும் சீக்கிரமாய் போய் அந்த சூத்திரனை சம்ஹாரம் செய்து ஜயப்ரதராய் திருநகரிக்குப்போய் ராஜ்யபரிபாலனம் பண்ணிக் கொண்டிருந்தார்.

——:o:——

# திராவிட வேதங்கள்

## இஹலோகத்திற்கு வந்த வ்ருத்தாந்தம்.

பூர்வகாலத்தில் கைலாசத்திலே பார்வதி விவாஹ மஹோத்சவத்தில், ப்ரம்ஹாதி தேவர்களும், மஹாரிஷிகளெல்லாரும் சேர்ந்திருக்கிற சமயத்தில் வடதிசையானது அதிக பாரத்தினால் தாழ ருத்திரனும் விஸ்வகர்மாவைப் பார்த்து இதென்ன ஹேதுவென்று கேட்க அந்த மஹா சபையில், விஸ்வகர்மா எழுந்தருளி நமஸ்கரித்து சுவாமீ அகஸ்த்ய மஹா முனிவர், இப்பொழுதே தென் திசையில் சேர்ந்தால் மேல் நோக்கின தென்திசை சமமாகு மென்ன ஆனால் அப்படிப்பட்ட மஹானுபாவரோ என்ன, தேவா, ப்ரஹ்மாண்டமெல்லாம் ஓரிடையும், அங்குஷ்டப்ரமாண ஸரீருசரான கடகும்பவர் ஓரிடையும் என்று பரிஹாஸ முகமாகச் சொல்ல, அத்தை லோபாமுத்ரா ப்ராணநாயகரான அகஸ்த்யர் கேட்டு மஹா கோபத்துடனே, விஸ்வகாமாவே என் ஸ்வருபகதனத்தை பரிஹாஸத்துடனே ப்ரசங்கம் பண்ணினாய் ஆகையாலே உன் வம்சஸ்தர்களெல்லாரும் ப்ராம்ஹணவ்ருத்தியை த்யஜித்து மதுமாம்ச நிஷேவனைகபாராயணராய் குலஹீனராய், ஸ்வர்ணம் அபகரிப்பவர்களாய் போகக் கடவதென்று சபிக்க விஸ்வகர்மாவும் கேட்டு மிகவும் சோகத்தாலே கோபித்து, அகஸ்தியரே உன் ப்ரபாவம் நிஜமாகச் சொல்ல நீர் நிஷ்காரணமாக சபித்தாய் ஆகையாலே நீ செய்த அழகு நிறைந்த தமிழானது வேதத்துக்குப் புறம்பான தன்மையதாகி ஞானிகள் அங்கரிக்கமாட்டார்கள் என்று ப்ரதிசாபம் குடுக்க அத்தை

கேட்டவுடனே, ப்ரளயகால அக்னிகணங்கள் போலே அகஸ்த்யர் நேத்ரங்களிலிருந்து அக்னி புறப்பட்டு நிமிஷ மாத்திரத்திறதில் ப்ரஹ்மாண்ட மெல்லாம் பஸ்மீபூதமாக செய்யக் கடவேனென்று நினைத்து ஹூம்காரம் பண்ணுகிற சமயத்தில், அண்ட கடாஹமானது நடுங்கி திசைகளுக்கு ப்ராப்தமாய் வந்துவிட இந்த மஹோபத்ரவத்தைக் கண்டு, சித்த சாத்ய வித்யாதர கருட கந்தருவ யக்ஷ ராக்ஷச, அப்சரச, கின்னர பன்னக மௌனி யோகி ப்ருந்தங்கள், மஹாபீதியோடே, மோசம் வந்தது, சப்த சமுத்திரங்களும், கரதலத்தில் வைத்துக்கொண்டு, ஆசமன சத்ருசமாக பானஞ் செய்த கும்பசம்பவர் கோபாக்னி பிறப்பித்த பின்பு இந்திரமூர்த்திகளேது, ப்ரபஞ்சமேது, நாமேது, முடிந்தது முடிந்தது, ஸ்ரீமந் நாராயணனே, வாசுதேவா, நிர்தயாளா, ஜகத்ரக்ஷகா, விஸ்வம்பரா, ஜகந்நாயகா, இந்த சமயத்தில், உபேக்ஷிக்கலாமோவென்று, கதறி, பதறி, விழுந்து எழுந்திருந்து ஓட, ருத்ரனும், ப்ரம்ஹாவை முன்னிட்டுக்கொண்டு போய், அகஸ்தியரை பஹுமுகமாய் துதிசெய்து, கலசஸம்பவரே ஸ்வல்பத்துக்காக ஜகத்வம்சம் செய்யத் தகுமோ மனஸ்தாபம் வேண்டாம் பாஷைகளுக்கெல்லாம் உன் பாஷையான திராவிடம் சிரோமணியாகக் கடவது, நான் சுந்தர மூர்த்தியாகவும், அப்பர், மாணிக்யர், சம்மந்தராகவவதரித்து உன் பாஷையிலே திவ்ய ஸ்தலங்களைப் பாடுகிறேனென்று சபதம் பண்ணின விடத்திலும் புகையில்லாத அக்னி கணங்கள்போலே யிருக்கக் கண்டு, ஸ்ரீமந்நாராயணனுக்கு

ப்ரதம புத்ரனுமாய் உலகங்களுக்கெல்லாம் ஒரு பிதாவுமா யிருக்கிற ப்ரம்ஹதேவன் அகஸ்த்யரைப் பார்த்து ம்ருது மதுரவசனவிசேஷங்களாலே கோபத்தை ப்ரசாந்திசெய்து, ஓ கும்பசம்பவரே, முனிகுல சார்வபௌமா, சாஸ்த்ரப்ரவீணா, வேதாந்த தத்வரஹஸ்ய ப்ரதிபாத்யமான ஜகதாசார்ய ஸ்வரூபஸ்திதி கர்தாவே சுத்த சாத்வீக மூர்த்தி! உமக்கு கோபம் தகுமோ வயிற்றிலிருக்கிற சிசு காலால் உதைத்தால் தாயானவள் அந்த சிசுவை அடிக்கலாமோ, இந்தப்ரபஞ்சம் உம் மதன்றோ! மனோவ்யாகூலம் விட்டுவிடும், என் தந்தையான ஸ்ரீமந்நாராயணனைக் குறித்து தவஞ் செய்தால் உம் அபீஷ்டங்கள் அந்த சர்வேஸ்வரன் பரிபூர்ணம் செய்வாரென்ன, அகஸ்தியரும் சந்தோஷித்தார். ஜகங்களும் சந்தோஷத்தை யடைந்தார்கள். பின்பு அப்பொழுதே கும்பசம்பவர், பொதிகை மாமலைக்கு எழுந்தருளி ஸ்ரீயபதியைக்குறித்து கோர தவம் செய்ய, ஸ்ரீமன் நாராயணன் மிகவும் மகிழ்ந்து ஸ்ரீ பூமி நீளா சேவ்யமானனாய், கருடவாஹனருடனாய் ப்ரம்ஹ ருத்திரேந்திராதி மௌனி ப்ருந்தங்கள் சேவிக்க, அகஸ்தியருக்கு ப்ரசன்னராய். ஓ கும்பசம்பவ மஹரிஷியே! நீ செய்த தவத்துக்கு மஹாசந்தோஷத்தை அடைந்தேன். நான் இந்த லோகத்தில் நாலுவர்ணங்களிலே பராங்குச பரகாலாதி நாமங்களாலே திருவவதரித்து வேதங்களை உனது பாஷையான திராவிடத்திலே பாடி வேதத்துக்கும் எனக்கும் முன்னதாக நடக்கும்படி செய்கிறேன், நீ அஞ்சவேண்டாம் என்று வேண்டுமான வரங்களை எல்லாங் கொடுத்து அவரனுமதியைக் கொண்டு ஸ்ரீயபதி ப்ரம்ஹ ருத்திரேந்த்ராதி ஸுரமுனி சேவ்யமானனாய் பரமபதத்திற் கெழுந்தருளினார். பின்பு அகஸ்தியரும் மஹாப்ரீதியோடே சுகமேயிருந்தார்.

அங்கே ஸ்ரீ வைகுண்டத்தில், அப்ராக்ருத திவ்விய

தேஜோமயமாய் ப்ரகாசிக்கின்ற திருமாமணி மண்டபத்தில் லக்ஷ்மீ ஸமேதராய் எழுந்தருளி இருந்து தம்மெதிரில் அஞ்ஜலிஹஸ்தராக நிற்கின்ற திருவனந்தாழ்வானை க்ருபை கூர்ந்து கடாக்ஷித்தருளி பூலோகத்தில் அநாதி கர்மவசர்களாகி ஜனனமரணங்களாலே துக்கப்பட்டு வருந்துகின்ற ஜீவாத்மாக்களை முக்தர்களாக்கும் பொருட்டு நம் திருக்குருகூரில் காரி யென்பவருக்கும் அவன் மனைவி உடைய நங்கைக்கும், நம்சேனைமுதலியாரைப் புத்திரராக அவதரிப்பிப்போம். நீரும் முன்பாகத் திருக்குருகூரிலே திருப்புளியாக அவதரியுமென்று திருவாய் மலர்ந்தருள, அந்த ப்ரகாரமே திருவனந்தாழ்வான் த்வாபரயுகம் எட்டு லக்ஷத்தறுபத்து மூவாயிரத்தொண்ணூற்றெழுபத்தொன்பதாவதான ஸர்வ வருஷம் ஆனி மாதம் மூலநக்ஷத்ரத்தில் தாம்ரபர்ணி நதி தீரத்தில் திருக்குருகூரில் ஆதிப்பிரான் சந்நிதிக்கு வடபார்சத்தில் அவதரித்து, உறங்காப்புளி யென்கிற பெயரைப் பெற்று கண்டவர்களிக்க வளர்ந்துக்கொண்டு இருக்கையில் ஸ்ரீமந்நாராயணன் சேனாபதியை பார்த்து நீர் லீலாவிபூதிக்குப்போய் உடையநங்கையா ரென்கிற நாதநாயகிக்கு பராங்குச ரென்கிற அபிதானத்தாலே அவதரித்து அகஸ்த்யருக்கு நான் சொன்னப்படிக்கு வேதங்களை த்ராவிடத்தாலே பாடி வேதத்துக்கும் எனக்கும் முன்னதாக நடக்கும்படி செய்து ஸர்வாதிகாரமாக்கி உமக்கு அவயவசம்பூதரான பூத, ஸாரா, மஹத்தாஹ்வய, பார்கவ, குலசேகர, ஸ்ரீவிஷ்ணு சித்த, பக்தாங்க்ரிரேணு, யோகிவாஹ, பரகாலாதி முனிஸ்வர்களாலே அருளப்படும் த்ராவிட வேதார்த்தங்களையும் பிரகாசிப்பித்து சகலாத்மாக்களையும் ரக்ஷித்து என் சந்நிதிக்கு அனுப்பியும் என்ன, அப்போது சேனாபதி லீலாவிபூதிக்கெழுந்தருளி தாம்ரபர்ணி நதி தீரத்தில் திரு நகரியில் ஸ்ரீநாதநாயகி கர்ப்பத்திலே ப்ரவேசித்தார்.

உடைய நங்கையார் கர்பவதியாகிக் கலியுகாதி நாற்பத்து மூன்றாவது நாளான ப்ரமாதிவருஷம் வசந்தருதுவில் வைகாசி மாசம், சுக்லபக்ஷம், சுக்ரவாரம், பௌர்ணமி கர்கடக லக்னம், விசாக நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில், ஆதித்ய ராம திவாகராச்யுத பாநுக்களுதயத்தில், தேங்காத உள்ளிருள் நீங்கித் தோஷியாத பிறவிக்கடல் வற்றி, விகஸியாத கமலங்களும் அலர்ந்ததைப் போல், அநேக சுபசகுனங்களுண்டாக, வகுள பூஷண பாஸ்கரனென்கிற இவ்வாழ்வார், உடைய நங்கையார் கர்பமாகிற கீழ்த்திசையிலுதயமாகி, ப்ராக்ருத சிசுக்களைப்போலே அழாமலும், கண்திறவாமலும், தம்முடைய திருவாயால் முத்தினை முறுவல் செய்து மூக்குமிஞ்சி முலையுண்ணாமலும், ஜலமல விஸர்ஜனாதிகளற்றும், நாளுக்கு நாள் அபிவ்ருத்தியாகிற திருமேனியை யுடையவராயிருக்கக், காரி முதலியாரும், இவரைப் பெற்ற வயிறுடையாளான உடைய நங்கையாரும் பார்த்துத் திருக்குருகூர் நம்பியினுடைய ஸாந்நித்யம் இவ்வண்ணமிருக்குமாகில் நம்மாலாவதென்னவென்று திருக்குருகூர்நம்பிபக்கல் ந்யஸ்தபரராகி, பன்னிரண்டாவது நாளில், திருச்சங்கணித் துறையை யுடைத்தான, பொருநல்நதியின் தென்கரையில், திவ்யமங்கள விக்ரஹ யுக்தனாய்ச், சங்கசக்ரதரனாய்ப், புண்டரீகாக்ஷனாய், இஷ்டத்தைக் கொடுத்து அனிஷ்டத்தைப் போக்குமதைச் சூசிப்பிக்கிற திருக்கைகளை யுடையனாய், நீலமேக ஸத்ருசனாய், ஆஸ்ரிதர்களை

யெத்தக்காலத்திலும் கழுவவிடாதவனாய், எழுந்தருளியிருக்கிற, பொலிந்து நின்றபிரான் திருமுன்பு எடுத்துக்கொண்டு போய் சேவிக்கப் பண்ணித் திருப்புளியாழ்வா ரடியிலே, ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு தொட்டிலிற் கிடத்தி, "மாறன்" என்று திருநாமஞ்சாற்றி, மகிழ்வெய்தி யிருந்தனவாயில், இவ்வாழ்வார் கீழேநழுவித் தவழ்ந்து போய் இவருக்காகவே வளர்ந்திருக்கிற திருப்புளியாழ்வாரடியிலே பத்மாசன மிட்டுக் கொண்டு ஞான முத்திரை தரித்து வீற்றிருக்க, மாதாபிதாக்களும், கோயில் பரிகரத்தாரும் கண்டு விஸ்மயப்பட்டு, இவரைப்புத்ரப்ரதிபத்தி பண்ணாமல் "எங்கள் குடிக்கரசே" என்கிறபடியே தங்களுக்குள் குடிக்கு குலதெய்வமாகப் பாவித்துச் சேவித்துக் கொண்டிருந்தார்கள்.

அனந்தரம் பரமபத நாதனுடைய நியமனத்தால், (ஸேனேஸஸ் ஸ்வயமாகத்ய ப்ரீத்யா ஸ்ரீநகரீம் ஸ்வயம், சடகோபாய முனயே திந்த்ரிணீ மூலவாஸினே, தாபாதி பூர்வகம் ஸ்லோகம் மந்த்ரரத்ந, த்வயாதிகம்) என்கிறபடி ஸ்ரீஸேனை முதலியார் வந்து பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாய் மந்த்ர மந்த்ரார்த்த நிகில புருஷார்த்தங்களையும் த்ராவிட வேதங்களையும், பிறர் காதில் படாதபடி உபதேசித்துத் திவ்யஞான சம்பன்னராக்கிவைத்து எழுந்தருள, பசுங் குழந்தையான இவ்வாழ்வார் உத்க்ருஷ்டமான ஞானபூர்

ளாராகித், திருப்புளியாழ்வானடியில்தானே பதினாறுதிரு
நக்ஷத்ரமளவாக, லௌகிகரைகண்திறந்துபாராமல், தாமறிந்
துகொண்டிருப்பதை யாருக்குஞ்சொல்வதென்று ஆலோசிக்
கையில் சமீபத்தில் ஒருவரும் பக்குவப்பட்ட அதிகாரிகள்
இல்லாமையாலே, மௌனியா யிருந்துவிட்டார். இப்
படியிருக்கையில், பாண்டிய தேசத்தில், செல்வம் மல்கி
அவன் கிடந்த திருக்கோளூரிலே த்வாபரயுகத்தில் எட்டு
லக்ஷத்தெழுபத்தஞ்சாயிரத்தெழுநூற்றுது எழுபத்தெட்டு
சென்ற சர்வாரிவருஷம் சித்திரைமாசம் சுக்லபக்ஷம் பதினா
ந்தாவது தேதியில் சுக்ரவாரம் சித்திர நக்ஷத்திரம
கூடிய சுபதினத்தில் பெரிய திருவடி குமுதனென்
கிற கணேசர் ஆகிய இவ்விருவ ரம்சபூதராய் ஸாம
ஸாகாத்யயன முன்குடுமிச் சோழிய ப்ராம்ஹண வம்
சத்தில் ஸ்ரீவிஷ்ணுசேனர், தேவகீதவியார்களுக்கு புத்ர
ராய் மதுரகவியாழ்வார் என்கிற திருநாமத்தால், ஆதித்
யோதயத்திற்கு முன்னே அருணோதய முண்டானதுபோல
ஸ்ரீவகுளபூஷண பாஸ்கரோதயத்திற்கு முன்னமே இவருத
யமாக, இவருக்கு தத்தத் காலங்களிலே ஜாதகர்ம, நாம
கரண, அன்னப்ராசன, சௌளோப நயனாதிகளை யெல்
லாம் செய்வித்து, சதுர்தசவித்யைகளையும் அதிகரிப்பிக்க,
அதிநிபுணராய் விரக்திதசையை யடைந்து, முக்திப்ரத
மாகச் சொல்லப்படுகிற திவ்ய தேசங்களைச் சேவிப்பதாக
தம்முடைய அவதார ஸ்தலமான திருக்கோளூரைவிட்டுப்

பெருமாள் கோவில், வடமதுரை, அவந்திகாபுரி, கங்கைக் கரை கண்டம், திருத்வாரகை முதலிய திருப்பதிகளைச் சேவித்துத் திருவயோத்தியில் யோக நிஷ்டையில் எழுந்தருளி யிருக்கையில், ஒரானொருநாள் இராத்திரியில் இவர் ஜல சங்கா நிவ்ருத்யர்த்தமாக வெளியில் வந்தபோது தென் திசையில் ஒரு அப்ராக்ருததேஜஸ்ஸுதோன்ற, இதென்னென்று திகைத்து, ஏதோ கிராம நகரங்களில் தீமண்டினதோ, அல்லது காட்டுத்தீயோ வென்று தம்மில்தாமே அநுமானித்து உள்ளேபோய் அன்றைக்குக் கண்வளர்ந்தருளினர். பின்னையும் இரண்டு மூன்று நாள் அவ்விதமே காணப்பட; இது "ப்ராக்ருத தேஜஸ்ஸன்று" அப்ராக்ருத திவ்ய தேஜஸா யிருந்தது என்று நன்றாக பார்த்து, இக்காரணத்தை நாம்பரீக்ஷிப்போம் என்று பகலெல்லாம் கண்வளர்ந்தருளி இராக்காலத்தில் அந்த தேஜஸ்ஸேகுறியாக அதித்வரையுடனே மீண்டெழுந்தருளி, புண்ய க்ஷேத்திரங்கள்தோறும் சோதித்துக்கொண்டுவந்து, திருவரங்கம் பெருநகரியிலே சோதிக்க, அதுக்கும் அப்பாலே தென்திசையிலேயாயிருக்க பின்னையும் பூர்வம்போலேத்வரித்து எழுந்தருளி, மாடமாளிகை சூழ்ந்தழகாய திருக்குருகூரிலே சென்று அப்பால் பார்த்துக் காணாமையாலே, இது இங்கேயாயிருக்கும் என்று சோதித்து பொலிந்து நின்ற பிரான் சந்நிதிமுதலியவைகளைப்பார்த்து, இங்கேதாவது அதிசயங்களுண்டோவென்று கேட்க; அவர்கள் திருப்புளியாழ்வாரடியிலே

யுண்டோ என்ன, இவரங்கே போய்ப் பார்க்க, ஸத்ஞான கண
பூர்ணராய், உறங்காப்புளி நிழல் தன்னிலே முகுளிதநயன
ராய், ஷோடஸ வார்ஷிகராய், ஷோடச கலாபூர்ணனான
சந்த்ரனைப்போலே பத்மாஸனோப விஷ்டராய், பாரதத்வ
போதமுக்தாயுக்தராய், பரமாசார்யரான ஸ்ரீபராங்குச
ரைப்பார்க்க, பகவ தநுபவம் பண்ணிக்கொண்டு, தம்மை
கடாக்ஷித்தல், ஒரு ஸ்ரீஸூக்தி யருளிச்செய்தல் செய்யக்
காணாமையாலே அவருடைய ஸ்ரீஸூக்தியைக் கேட்கவேணு
மென்று திருவுள்ளமாய் இவர்க்கு சைதந்ய முண்டோ,
செவிகேட்குமோ என்று பரீக்ஷிக்கைக்காக ஒருகுண்டுக்
கல்லை எடுத்து அவர் முன்னே திமரென்றுபோட, அவரும்
அதுகேட்டு, நிடுக்கென்று திருக்கண்களைமலரவிழித்துப்
பார்த்தருள; ஸ்ரீமதுரகவிகளும், இவருக்கு வாக்குண்டோ
இல்லையோ வென்று அறியக் கடவோம் என்று அவரைக்
குறித்து, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்
தைத்தின்று எங்கே கிடக்கும்" என்ன அவர் திருக்கண்களை
மலரவிழித்து இவரை கடாக்ஷித்து "அத்தைத்தின்றங்கே
கிடக்கும்" என்று ஆழ்வார் அருளிச் செய்ய; இவர்ஸர்வக்
ஞராயிருந்தார்; இம்மஹானுபாவரை நாம் அநுவர்த்தித்து
உஜ்ஜீவிக்க வேணும் என்று நினைத்து மிகவும் ஸந்துஷ்ட
ராய், அடியேனுக்குத்தோன்றிய தென்திசை சூரியன்
தேவரீர் தானே என்று தானுங் கடக்கையுங் கூப்பித் தன்
டனிட்டு எழுந்து அஞ்சலி ஹஸ்தராய் நின்று தம்மை

யங்கீகரித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க அவர் இவருக்கு "ஸேனேசகருணாலப்த பஞ்சஸம்ஸ்கார ஸம்ஸ்க்ருதஃ, தத்தா மந்த்ரா கவ்யாதேந பஞ்சஸம்ஸ்காரதோ தாகுரு:, தஸ்மை த்ராவிடவேதாந்த சதுர்ணா முபதேஸக்ருத்" என்கிறபடியே பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாக மந்த்ர மந்த்ரார்த்தங்களையும் க்ருபை செய்து, நாம் பகவதநுபவத்திற்குப் போக்கு வீடாகச் சொல்லும் பாசுரங்களை நீர் பட்டோலையிலேற்றியருளப்பண்ணுமென்று ஆக்ஞாபிக்க ஸர்வகாரண பூதனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வ நியந்தாவாய், இந்த்ர நீல நிறமான திருமேனியையும் சதுர்ப்புஜங்களையும் உடையனாய், ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளி இருக்கிற ஸ்ரீமந்நாராயணன், நம்மாழ்வாருக்குத் திருமுகப்ரதானம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி, இறைப்பொழுதும் மார்பை விட்டு அகலாத கருணாரூபையான பிராட்டி ஸஹிதனாய், பெரியதிருவடிமேலெழுந்தருளி வந்து தன்னுடைய ஸ்வரூப, ரூப, குண, விபூதி சேஷ்டிதங்களை யெல்லாங் குறைவறக்காட்டி, மயர்வறமதிநலமருள, ஆழ்வார், எம்பெருமானுடைய திவ்யாத்ம ஸ்வரூபத்தையும், அதற்கு ப்ரகாசமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதற்கு ஆதேயமான திவ்ய குணங்களையும் நன்றாக வநுபவித்து, அவ்வநுபவ ஜனிதப்ரீதியுள்ளடங்காமையாலே, ருக், யஜுஸ், ஸாம, அதர்வண மென்கிறவேதத்ரயங்களைத், திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய

திருவந்தாதியாகவும், வேதங்களுக்குள் ஸாமவேதம் நானே
யாகிறேனென்று கீதாசார்யனால் விலக்ஷிக்க நின்ற ஸாம
வேதத்தைத், ஸாமப்ரபந்தமான திருவாய்மொழியாகவும்,
நாடும் உலகும் உய்ய, நல்லவகையால் திருவாய் மலர்ந்
தருள, அவை தம்மை, மதுரகவி யாழ்வார் தொடக்கமான
ஸஜ்ஜனங்கள் "மிக்க வேதியர் வேதத்தி னுட்பொருள்,"
என்று நெஞ்சுட் கொண்டு, அறியக்கற்று வல்லார்களாக;
அந்தருவாயில், கோயில், திருமலை, பெருமாள் கோயில்
தொடக்கமான நாற்றெட்டு திவ்யதேசத்து எம்பெருமான்
கள், ஆழ்வாரிருக்குமிடத்தேற எழுந்தருளித் திருமுக
ப்ரதானம் பண்ணியருள அப்போது நித்ய ஸூரிகளும்,
ஸ்வேதத்வீப வாஸிகளும் திரண்டு வந்து திருப்புளியாழ்
வான் அடியிலுள்ள வைபவங்களை ஸேவித்து நிற்க; இவ
ரவர்களை "பொலிக பொலிக" வென்று மங்களாசாஸனம்
பண்ணி, அவர்கள் வைபவங்களைப் ப்ரிந்து அநுபவித்த
தமக்கு, "மாறுளதோ விம்மண்ணின் மிசை" என்றும்
"இனியாவர் நிகர் அகல்வானத்தே" என்றும் அநுசந்
தித்து, உபயவிபூதியிலும் தமக்கு நிகரில்லாதபாவத்தை
யுடையவராய், பூமியிற்பிறந்தார் சோறு, நீர், அடைக்கா
யிலை, முதலிய வற்றைத், தேஹயாத்ரையாகக் கொள்வது
போலல்லாமல், இவர் அவனுடைய கல்யாணகுணங்களையே
தம்முடைய தேஹயாத்ரைக்கு வேண்டின சோறு நீரா
களாக வநுபவித்தும், ஆதிப்பிரான் ப்ரஸாதித்த வருள

மாலையைத் தரித்து வகுளாபரணரென்றும், பரசமயக் களைக்களைந்து பராங்குசரென்றும், சடத்தைக் கோபித்துச் சடகோபரென்றும் திருநாமங்களைப் பெற்று, நம்மாழ்வார் தன்னைச் சூழ்ந்திருந்த, சாரி, உடையநங்கை முதலானவர்களைப் பரமபதத்தில் நித்யாநுபவத்தை அநுபவிக்கக்கடாக்ஷித்தருளி, மதுரகவிகளுடன் தாமுமாக சிலகாலம் நித்தியாநுபவம் செய்துக்கொண்டு எழுந்தருளி இருந்தார்.

பின்பு முப்பத்தஞ்சி வயதானபிறகு ஒரு நாள் இந்த சரீரத்தை இவ்வுலகத்தில் சுமந்துக்கொண்டு இன்னும் எத்தனை நாளிருப்பேன். இனிமேல் உன்னைப் பிரிந்து க்ஷணகாலமும் இச்சரீரமாகிய சுமையை சுமக்க மாட்டேன், உன் திருவடியறியச் சொல்லுகிறேன், என்னை யழைத்தருள வேண்டும், கிருபாநிதியாகிய ஸ்ரீமந்நாராயணனே யென்று பிரார்த்திக்க, அப்போது ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளக் கண்டு, அளவிடப்படாத மகிழ்ச்சியோடும் மெழுந்து, விழுந்து, அடிபணிந்து கண்களில் ஆனந்தபாஷ்பம் பெருகக் கைகளைக் குவித்துக்கொண்டு, பலவாராகத் துதித்து நின்று, நம்மாழ்வாரை பார்த்தருளி, நம்முடன் பரமபதத்துக்கு வாருமென்று திருவாய் மலர்ந்தருள, அப்போது மதுரகவிகள் அடியேன் நம்மாழ்வாரைப் பிரிந்து யெவ்வாறு உயிர்வைத்திருப்பேன், அடியேனையும் உடன் வரும்படி கடாக்ஷிக்க வேண்டு மென்று பிரார்த்திக்க, நம்மாழ்வாரை நோக்கி, கண்களில் நீர்விட்டழுது "கண்ணி

னன் சிறந்தாய்" வென்று முதலெடுத்துப் பத்துத்திருப் பாடல்களை ஆழ்வார் விஷயமாகப்பாடி பரமோபாய நிஷ்டையை வெளிப்படுத்தி, தேவரீரை எப்படிப்பிரிந்திருப் பேனென்று வியாகுலப்பட, அந்த ப்ரபந்நத்தை ஸ்ரீமந் நாராயணன் கடாக்ஷித்து, திரு உள்ள மிரங்கி, உமது கவி மதுரமாகவிருக்கின்றது, ஆதலால் உமக்கு மதுரகவிகள் என்ற பெயர்தரும், இன்னுஞ் சில நாள் இந்தத் திருப்புளி யின் கீழ், அர்சாரூபமாக நம்மாழ்வாரை யெழுந்தருளப் பண்ணிவித்துத் திருவாராதனஞ் செய்துக்கொண்டு, திரு வாய் மொழியை, உலகத்தில் பரவும்படி செய்து, பின்பு நமது பரமபதம் வந்து சேருமென்று திருவாய் மலர்ந்த ருளி நம்மாழ்வாருடன் ஸ்ரீவைகுண்டத்துக்கு யெழுந் தருளினார்.

பின்பு மதுரகவிகளும் சுவாமி நியமனப்படி தாம்ர பர்ணி தீர்த்தத்தைக் காய்ச்சி, இருகலைத்து, அதிஷ்டான தாது விசேஷத்தால் ஒருசிலைகூடின சிற்பியைக் கொண்டு, ஆழ்வார் திவ்யமங்கள விக்கிரஹத்தை யெழுந்தருளப் பண் ணிவித்து, அவருக்குக் கோயில்களெல்லாம் பண்ணிவித்து நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸ ரோத்ஸவாதி, மஹோத்ஸவாதிகளைக் குறைவற நடத்திக் கொண்டு, வேதந் தமிழ்செய்த பெருமாள் எழுந்தருளினார், திருவாய்மொழிப் பெருமாள் எழுந்தருளினார், திருவழுதி

வளநாடனெழுந்தருளினர், திருநகரிப் பெருமான் எழுந்தருளினர், திருக்குருகூர் நம்பி எழுந்தருளினர், காரிமாறனெழுந்தருளினர், ஸ்ரீசடகோபனெழுந்தருளினர், ஸ்ரீபராங்குசனெழுந்தருளினர், ஸ்ரீவகுளபூஷண பாஸ்கரனெழுந்தருளினர், பொருநற்றுறைவரான புலவர்கோன் எழுந்தருளினர், என்று பல சின்னம் பரிமாறி விருதூதிக்கொண்டு வாசிக்க, அவ்வளவிலே, சங்கத்தார் சிஷ்யர்கள் அங்குவந்து இவருடன் தர்க்கித்து உங்கள் பெருமான் எங்கள் சங்கத்தாரிடம் வந்து ஜயித்து சங்கப் பலகை யேறினலொழிய வேதந் தமிழ்செய்த பெருமானென்று நீர் விருது பிடிப்பது செல்லும்; அப்படிக்கில்லாவிடில் செல்லாதென்றுதடுக்க, இவரதைக் கேட்டருளி நீர் சொல்வது நியாயமேயாகிலும், எங்கள் பெருமான் திருப்புளியாழ்வானடியை விட்டெழுந்தருளினதில்லையே! இப்போது நாம் அவருடைய அருளிச் செயல்கள் ஆயிரத்திலொரு பாசுரத்தை இந்தச்சிறுமுறியி லெழுதியருளப்பண்ணிக்கொடுக்கின்றோம்; நீர் இதனைக்கொண்டுபோய் உம்முடைய சங்கப் பலகைமேல் வைத்துச் சங்கத்தார்கள் அதை ஜயிக்கவல்லவர்களாயிருக்கிறார்களோ இல்லையோ வென்று பார்த்து எம்மிடம் வந்து தர்க்கிக்கலாமென்ன; அவர்களும் சம்மதித்து கொடுமென்ன; இவர் ஒரு சிறுமுறியில் "கண்ணன் கழலிணை" என்னும் பாசுரத்தை எழுதியருளப் பண்ணிக்கொடுக்க; அவர்கள் அதைப்பெற்றுக்கொண்டுபோய்ச் சங்

கத்தாரிடம் நடந்த வாக்வாதங்களையுஞ்சொல்லி பலகையின் மீது வைக்க உடனே அந்தப்பலகை தன்மீதிருந்த, சங்கத் தமிழ்ப்புலவர்களையும் குபீரென்று கவிழ்த்து விட்டு ஆழ்வாருடைய ஸ்ரீசூக்தி சிறு முறியை மாத்ரம் தரித்து நிற்க; அவர்களெல்லோரும் பயந்து அதை எடுத்து அதிலெழுதியிருக்கின்ற ஆழ்வார் அருளிச்செய்த ஆயிரப்பிரபந்தத்தின் தொண்ணூற்றைந்தாந் திருவாய்மொழியில் "கண்ணன் கழலிணைகள், நண்ணு மனமுடையீர், எண்ணுந்திருநாமம், திண்ணம்நாரணமே" என்னும்முதற்கவியின் முதற்பாதத்தை வாசித்தறிந்து, உலகெல்லாம் உள்ளடி யடக்கிய கண்ணன் கழலிணைகளைத் தன்னிடத்தில் அடக்கிய இச்சிறு முறிக்கு இடங்கொடுத்த சங்கப்பலகை, இதனோடு சமானமாக நமக்கும் இடங்கொடுக்குமா, கொடாதாதலால் நம்மை அகற்றிவிட்ட தென்றும், சகல வேத சாஸ்திரங்களையும் பிறரால் கற்பிக்கப்படாமல் தாமேயுணர்ந்த சாக்ஷாத் பகவதம்சமாகிய ஆழ்வாருடைய தெய்வீகமான பாண்டித்யத்திற்கு, நமது பாண்டித்தியம் ஷோடசாம்சத்தில், ஏகாம்சமும் காணாதேயென்று நினைத்துத் துக்கித்து, மற்றும் திருவள்ளுவர் குறள் செய்த காலத்தில், அவரும், ஔவையும், இடைக்காடரும், சந்தித்த சமயத்தில் வள்ளுவரை நோக்கி, நீர் செய்த நூல் எத்தன்மைத்தாகிய தென்று வினவ, அவர் அகஸ்த்யரால் ப்ரசித்தம் பண்ணப்பட்ட, இயல், இசை, நாடகமென முத்திறத்ததாகிய

தமிழும், என்னால் செய்யப்பட்ட குறளும், உடைய நங்கையின் திருக்குமாரராகிய சடகோபர் அருளிச்செய்தத் திருவாய் மொழியின் புத்திர ஸ்தானமாகிய வழிநூலா மென்னும் கருத்தை உள்ளமைத்து.

"குறுமுனிவன் முத்தமிழு மென் குறளு நங்கை சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்" என்று சொன்னதையும் அது கேட்டு ஒளவை, அர்த்தபஞ்சகத்தையும், விதர்சது புருஷார்த்தத்தையும், அறப்பால் முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட திருவாய் மொழியின் உண்மைப் பொருளை, எவ்வகைப்பட்ட வேதங்களுக்கும் சம்மதமாகிய மேலான பொருளைக் குளிர்ச்சி தங்கிய, தாம்ரபர்னி தீரத்திலிருக்கும் திருக்குருகூரில் காரி முதலியார் புதல்வராய் அவதரித்த, நம்மாழ்வாரது திருவாய் மொழியை த்ராவிட வேத மென்று சிலர் சொல்லுவார்கள். நான் அவர்கள் சொல்லை மறுத்து, அத்திருவாய்மொழியை இந்த உலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந்நாராயணனும் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டு வந்த கீர்வாணவேதமென்றே சொல்லுவேனென்னும் கருத்தை உள்ளிட்டு,

"ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளிற் பெய்தமைத்த, செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத் தன்குருகூர்ச் சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின்."

தாய் மொழிய தென்பேன் றனைக்ந்து,

என்று சொன்னதையும்,

இடைக்காடர், த்ராவிட வேதமாகிய செய்மொழியையும், கீர்வாண வேதமாகிய தாய் மொழியையும் ஆராய்ந்து சொல்லுமிடத்தில் இரண்டுமொன்றேயாம். திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றே சொல்லுவார்கள். திருவாய் மொழியைப் போல சிறந்த நூல்கள் அனேகம் உண்டென்று சிலர் குதர்க்கம் செய்தாலும், நானவர்களை மறுத்து அவைகளும் இந்தக்குறளும் அத்திருவாய் மொழியினது சாயையா யிருப்பவைகளென்றே சொல்லுவேனென்னும் கருத்தை அடக்கி

செய் மொழியோ தாய்மொழியோ செப்பிலிரண்டு மொன்
றவ்வாய் மொழியை யாரு மறை யென்பவ்வாய் மொழி
போல் ஆய்மொழிகள் சாலவுளவெனினு மம்மொழியின்
சாய் மொழியென்பேன் யான்றனைக்ந்து"

என்று சொன்னதையும் நினையாமல் போனுமே அவைகளை நினையாவிடினும்,

ஒருகாலத்தில் தாம்ரபாணி நதியின் வட கரையில் வசித்திருந்த யோகியொருவர் வளர்த்த, நாயொன்று தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதிதினமும்

மத்தியான வேளையிற்போய் வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத்தின்று, வயிற்றை நிரப்பிக்கொண்டு வருவதுண்டு. அவ்வழக்கப்படி ஒரு நாள் போய்த்திரும்பி வர நேரமானதனால், யோகியானவர் நாய் யின்னும் வரவில்லையே யென்று ஆற்றோரத்தில் வந்து பார்க்கும் பொழுது, அந்நாய் கட்டாற்றில் வருகையில், அகஸ்மாத்தாய் வெள்ளம் வந்தமையால் நீந்திகாலோய்ந்து போய் நீரில் அமிழ்ந்து கிளம்பிற்று, அத்தருணத்தில் அதன் கபாலம் வெடித்து அதின் வழியாய் நாயின்ஆத்மாவாகிய ஜோதியானது எழுந்து, அமாவாசை யிருளில் கோடி சூரியப்ரகாசம் போலப்பிரகாசித்ததைப் பிரத்தியக்ஷமாகப்பார்த்து; கேவலம் திர்யக்காகிய நாயும் பெறுதற்கரிய, பேறுபெற்றதே? இதென்ன சாதனத்தை யுடைத்தாயிருந்தது. ஒன்று மில்லாதிருந்தும், ஆழ்வார் திருநகரியின் உச்சிஷ்டத்தை உண்டதனாலல்லவோ இப்படி சம்பவித்தது. இது தபசிகள், யோகிகள், ஞானிகள், முதலானவர் களுக்கும் சித்திக்கமாட்டாதே! என்று நினைத்து மனதுருகிக் கண்ணீர்விட்டு அழுது அவர்.

“வாய்க்கும் குருகைத் திருவீதி யெச்சில் வாரியுண்ட
நாய்க்கும் பரமபதமளித்தா யந்த நாயொடிந்தப்
பேய்க்கு மிடமளித்தாற்பழுதோ பெருமான் மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத்தமிழ்க்கடலே.”

என்பது முதலாகச் சில பாடல்களால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்ததையாவது நினைக்கவேண்டுமே? அப்படி ஞ் செய்யாமல் செருக்கினால் அபசாரப் பட்டோமே; அவர் திருவாய் மொழியையும் அவமதித்தோமே யென்று எண்ணி யெண்ணி அநுதாபப்பட்டு, அவர்க ளெல்லாம் நிகர்விகளாய், அவ்வபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும் பொருட்டு அவருடைய மகிமை தங்கிய பிரபாவத்தைக் குறித்து.

“சேமங் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ-தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமானுக்கு” என்றுபாடி ஸ்துதி செய்தார்
[கள்.

சங்கப்புலவர்கள் அத்தனை பெயரும் ஆழ்வார் விஷயத்திற் தனித்தனியாக பாடிய பாடல்களெல்லாம் ஒன்றாக்கொண்டு ஒரு சொல்லாவது ஓரெழுத்தாவது, எழுத்தின் உருப்பாவது, அசை, சீர்தளை முதலியவைகளில் எதாவது சிறிதும் பேதமில்லாமல் இவ்வொரு பாடலின்படியே இருக்கக்கண்டு இதென்ன அற்புதமென்று அதிசயப்பட்டுப் பின்பு அவரது திருவாய் மொழியின் ஏற்றத்தைப்பற்றி,

“ஈயாடுவதோ கருடர்க் கெதிரே இரவிக் கெதிர் மின் மினி யாடுவதோ, நாயாடுவதோ உறுவெம் புலிமுன் நரி

கேசரி முன்னடையாடுவதோ பேயாடுவதோ வெழி லூர
வசிமுன் பெருமான் வகுளாபரணன் னருள் கூர்ந், தே
வாதுரை யாயிரமாமறையின் னொருசொற் பொருமோ வு
லகிற்கவியே,'' என்று கவி சொல்லி ஆழ்வார் திருவடிகளிற்
சமர்ப்பிக்கும்படிப் போகவிட; அதைக்கொண்டுவந்து மதுர
கவியாழ்வாரிடத்திற் சமர்ப்பித்துத் தண்டனிட்டுத் தாம்
முன்பு இவரிடத்தில் வாக்வாதம் பண்ணினது துர்வாத
மென்று, சங்கப்பலகைபோல் கண்ட அதிசயத்தையும் விண்
ணப்பம் பண்ணிக்ஷமை பெற்றுப் போனார்கள். இப்படி
ஸ்ரீமதுரகவியாழ்வார் ஸ்வாசார்யரான நம்மாழ்வார் வைப
வத்தை ஊரும் நாடும் உலகும் அறியும்படி ப்ரகாசிப்பித்
துக்கொண்டிருந்து உலகத்தை வாழ்வித்தருளி தம்முடைய
சிஷ்யரான ஸ்ரீபராங்குச தாஸரிடத்தில் ஸ்வாசார்யரான
ஸ்ரீபராங்குசருக்கு ஆக வேண்டிய கைங்கர்யங்களையும்
ஒப்புவித்து தன்னடிச் சோதிக் கெழுந்தருளினார்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

நம்மாழ்வார் சரித்திரம் முதற்பாகம்
ஸம்பூர்ணம்.

| | | | |
|---|---|---|---|
| | 0 | 5 | 0 |
| திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் | 0 | 12 | 0 |
| அமலனாதிபிரான் " | 1 | 4 | 0 |
| திருவாய்மொழி நூற்றந்தாதி வ்யாக்யானம் | 0 | 12 | 0 |
| ஞானஸாரம் " | 0 | 5 | 0 |
| ஸப்தகாதை " | 0 | 6 | 0 |
| ஸ்தோத்ரபாடம் க்ரந்த எழுத்து | 6 | 8 | 0 |
| இயற்பா வ்யாக்யானம் | 0 | 8 | 0 |
| பாலராமாயணம் உரையுடன் | 0 | 14 | 0 |
| [illegible] பாஷ்யம் | 0 | 6 | 0 |
| குறையலூர் திருமங்கைமன்னன் சரித்திரம் | 2 | 8 | 0 |
| வார்த்தாமாலை | | | |
| திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் வ்யாக் | 1 | 8 | 0 |
| யானம் | 0 | 12 | 0 |
| பரசமய விசிஷ்ட பரமதர்மஸாஸ்த்ரம் (தாத்பர்யஸஹிதம்) | 0 | 2 | 6 |
| உடையவர் சரித்திரம் தமிழ்நடை | 0 | 2 | 6 |
| முமுக்ஷுப்படி மூலம் அர்த்தபஞ்சக ஸஹிதம் | 0 | 8 | 0 |
| ஸ்ரீகுணரத்னகோசம் ப்ரதிபத தாத்பர்யம் | 0 | 2 | 0 |
| ஸ்ரீதுர்ஜனபரிபாலன ஸங்க்ஷேபம் | 0 | 8 | 0 |
| பரஸம்வாத [illegible] என்னும் புருஷார்த்த நிஷ்டை | 0 | 5 | 0 |
| ஸ்ரீஜயந்திமாலை | 0 | 1 | 0 |
| [illegible] தனியன் வாழி திருநாமங்கள் | 0 | 4 | 0 |
| திருக்கச்சிநம்பி ப்ரபாவம் | 6 | 4 | 0 |
| சரமோபாய நிர்ணயம் | 2 | 4 | 0 |
| ஸ்ரீபகவத்கீதை [illegible] ராமாநுஜபாஷ்ய ஸஹிதம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீபகவத்கீதை சுலோகம் தாத்பர்யம் | 0 | 1 | 0 |
| உடையவர் திருப்பச்சை கட்டியம் | 0 | 12 | 0 |
| நித்யாநுஸந்தானம் | 0 | 12 | 0 |
| டி. பாகெட்ஸைஸ் | 1 | 0 | 0 |
| த்வாதச [illegible] | 1 | 0 | 0 |
| யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் | 2 | 0 | 0 |
| [illegible] உரையுடன் | 2 | 0 | 0 |
| நாலடியார் உரையுடன் | 4 | 8 | 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் உரையுடன் | 5 | 0 | 0 |
| சுந்தரகாண்டம் உரையுடன் | | | |

| | | | |
|---|---|---|---|
| வர்த்யாவர்த்தனபாஷ்யம் | 1 | 8 | 0 |
| கலிபுராணம் | 0 | 12 | 0 |
| தசாவதாரப்ரபாவம் | 1 | 0 | 0 |
| திருக்குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் மூலம் | 0 | 2 | 0 |
| கீர்த்த முதல்பாடம் அர்த்தம் | 0 | 1 | 0 |
| இரண்டாம்பாடம் அர்த்தம் | 0 | 4 | 0 |
| மூன்றாம்பாடம் அர்த்தம் | 0 | 10 | 0 |
| தாமோதரஷ்டகம் ப்ரதிபததாத்பர்யம் | 0 | 10 | 0 |
| தருமம்சம் ஸ்லோகம் ப்ரதிபததாத்பர்யம் | 1 | 4 | 0 |
| திருப்பாவை மூலம் பாக்கெட்சைஸ் | 0 | 1 | 0 |
| திருப்பாவை மூவாயிரப்படி வ்யாக்யானம் | 2 | 0 | 0 |
| திருமாலை மூலம் பாக்கெட்சைஸ் | 0 | 1 | 0 |
| திருவிருத்தம் வ்யாக்யானம் அரும்பத ப்ரதிபதவ்யாக்யானம் | 2 | 2 | 0 |
| இராமானுஜ நூற்றந்தாதி உரையுடன் | 0 | 12 | 0 |
| இராமானுஜ நூற்றந்தாதி வ்யாக்யானம் | 3 | 8 | 0 |
| கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானம் | 1 | 4 | 0 |
| தத்வத்ரயம் வ்யாக்யானம் | 1 | 4 | 0 |
| பரதசால்லான் ரஹஸ்யம் | 1 | 8 | 0 |
| வர்க்யாவர்த்தனம் மூலம் தமிழ் எழுத்து | 0 | 2 | 0 |
| ஆசார்ய ஹ்ருதயம் மூலம் | 0 | 3 | 0 |
| ஆசார்ய ஹ்ருதயம் வ்யாக்யானம் | 2 | 8 | 0 |
| பெருமாள் திருமொழி வ்யாக்யானம் | 1 | 0 | 0 |
| நாச்சியார் திருமொழி வ்யாக்யானம் | 1 | 12 | 0 |
| பெரியாழ்வார் திருமொழி உரையுடன் | 3 | 0 | 0 |
| திருப்பாவை உரையுடன் ஆறாயிரப்படி | 1 | 0 | 0 |
| பெருமாள் திருமொழி உரையுடன் | 1 | 14 | 0 |

ஸ்ரீரங்கம்-சின்னஸாமய்யா,

ஸ்ரீரங்கவிலாஸ் ஸ்ரீவைஷ்ணவ புத்தகசாலை,

7, ராமாநுஜ அய்யர் தெரு,

ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Tamil Heritage Foundation
தமிழ் மரபு அறக்கட்டளை

Electronic preservation of Tamil heritage materials
e-Book series
an international NGO initiative to digitize old Tamil books and palm leaf manuscripts
visit http://www.tamilheritage.org

தமிழ் ஓலைச்சுவடிகள், நூல் பாதுகாப்பு.

பாதுகாப்பற்ற நிலையில், மறுபதிப்பு காணாத பழைய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற தமிழ் முதுசொம்களை மின்பதிப்பாக்கி தமிழ் வளத்தை நிரந்தரமாக்கும் ஒரு சர்வதேச தன்னார்வ முயற்சி.

மேலும் அறிய: http://www.tamilheritage.org

முதுசொம் முத்திரை
தமிழ்ப்பாதுகாப்பின் அக்கறை